[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2019 ஜூலை 10

2. மேலும், நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளியில் வணிக வரி இணை ஆணையர் அலுவலகத்தை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிக வரித் துறை அலுவலக வளாகம் 23.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இணையத்தின் மூலமாக பதிவுத் துறை ஆவணங்களைப் பதிவு செய்ய ஸ்டார் 2.0 மென்பொருள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. ஸ்டார் 2.0 மென்பொருள்மூலம் விரைவான மற்றும் வெளிப்படையான சேவை வழங்கப்படுவதால், பொது மக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதன் சேவைகளை மேலும் செம்மைப்படுத்த பழைய கணினிகளை மாற்றி, புதிய கணினி மற்றும் உபகரணங்கள் 21.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் துறை, வணிக வரி மற்றும் பதிவுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் அல்லும் பகலும் அயராது உழைத்து, மக்கள் நலப் பணிகள் ஆற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்வகையில், 5,000 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்பாடு மற்றும் கஜா புயலினால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சாலைகள் மற்றும் பாலங்கள் சீரமைப்பு, பழுதடைந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல், தனிநபர் உறிஞ்சுக் குழிகள், ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கழிவு நீர்த்தேக்கத் தொட்டி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த 10,000 தடுப்பணைகள், தேசிய ஊரக பொருளாதார*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

புத்தாக்கத் திட்டத்தைச் செயல்படுத்துதல் மற்றும் கிராம மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளித்தல் என இன்று விதி 110–ன்கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக 2,316.73 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அறிவிப்புகளையும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக 12,500 கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயம் செய்தும் மொத்தம் ஒன்பது முத்தான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் மற்றும் அதன் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு எந்த அரசும் செய்யாத அளவிற்கு அதிக நிதிகளை ஒதுக்கித் தந்து கொண்டிருக்கின்றார் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள். உயர் நீதிமன்றத்தில் இருக்கின்ற இடநெருக்கடியைப் போக்குவதற்காக, இதுவரை எந்த அரசும் செய்திருக்காத அளவிற்கு, அந்த வளாகத்தில் இருக்கின்ற கீழமை நீதிமன்றங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, பத்து மாடிக் கட்டடத்தில் ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு 202 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நீதித் துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் மூன்று சட்டக் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு, இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து இப்போது மீண்டும் மூன்று சட்டக் கல்லூரிகளைத் துவங்குவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கை முடிவின் அடிப்படையிலே, அனைத்து அலுவலகங்களும் அரசுக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்கள் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.48 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் நிதியொதுக்கியுள்ளார்கள். அதேபோன்று, ஸ்டார் 2.0 திட்டத்தில் புதிய கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.21 கோடியே 63 இலட்சம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக துறையின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண்45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

(ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

(அ) கோரிக்கை எண்45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,271,98,18,000/–, மூலதனக் கணக்கில் ரூ.33,53,14,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.